**EVERWIN VIDHYASHRAM**

**STD: VII L2 – TAMIL TERM –II**

**இயல் - 6**

**கவிதைப்பேழை : 1. ஒரு வேண்டுகோள்**

**2. கீரைப் பாத்தியும் குதிரையும்**

**உரைநடை உலகம் : பேசும் ஓவியங்கள்**

**கவிதைப் பேழை - ஒரு வேண்டுகோள்**

I. பொருள் தருக:

1. கரிசனை - அக்கறை
2. சித்திரம் - ஓவியம்
3. சமுத்திரம் - கடல்

II. குறுவினாக்கள்:

1. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை?

தாயின் மகிழ்ச்சியான உருவத்தை ஓவியமாக வரைந்தால், தாயின் முகத்தில் அன்பும், பாசமும் நிறைந்திருக்க வேண்டும்.

2. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?

ஒரு கலை மானுடப்பண்பு பெற்றிருந்தால் உயிர்ப்புடையதாக அமையும்.

**கவிதைப்பேழை - 2. கீரைப் பாத்தியும் குதிரையும்**

I. இரு பொருள் தரும் சொற்கள்:

1. மாலை - பூமாலை, பொழுது
2. மறை - வேதம், மறைத்துவைத்தல்
3. பார் - உலகம், பார்த்தல்
4. கால் - வாய்க்கால், குதிரையின்கால்

II. குறுவினாக்கள்:

1. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?

ஒரே பாடலில் இரண்டு பொருள் தோன்றும்படி பாடப்படுவது இரட்டுற மொழிதல் ஆகும்.

2. காளமேகப் புலவர் - பெயர்க்காரணம் தருக.

மேகம் மழை பொழிவது போலக் கவிதைகளைப் பொழியும் ஆற்றல் உடையவராதலால் காளமேகப்புலவர் என அழைக்கப்பட்டார்.

3. கீரைப்பாத்தியின் இயல்பு யாது?

மண்கட்டிகளை அடித்துத் தூளாக்குவர்.
மண்ணை வெட்டி பாத்திகளாக்கி வைப்பர்.
வாய்க்காலில் நீரைப் பாய்ச்சுவர்.
நீர் மடையின் இறுதிவரைச் சென்று மாற்றி விடத்திரும்பும்.
இதுவே கீரைப்பாத்தியின் இயல்பு ஆகும்.

**உரைநடை உகலம் - பேசும் ஓவியங்கள்**

I. பிரித்து எழுதுக:

1. அறிவிப்புப் பலகை - அறிவிப்பு + பலகை
2. பழங்காலம் - பழமை + காலம்
3. திரைச் சீலை - திரை + சீலை

II. சேர்த்து எழுதுக:

1. நாள் + காட்டி - நாட்காட்டி
2. வண்ணம் + கலவை - வண்ணக்கலவை

III. குறுவினாக்கள்:

1. ஓவியங்களின் வகைகள் யாவை?

ஓவியங்களின் வகைகளாவன குகைஓவியம், துணிஓவியம், ஓலைச்சுவடி ஓவியம், செப்பேட்டு ஓவியம், தந்தஓவியம், கண்ணாடி ஓவியம், தாள்ஓவியம், கருத்துப்பட ஓவியம், நவீன ஓவியம்.

2. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?

பழங்கால மனிதன் எப்படி வாழ்ந்தான் என அறிய முடிகிறது.

செய்திகளை மற்றவர்களுக்கு தெரிவிப்பது முக்கியமானதாக கருதப்பட்டன.

குகை ஓவியங்களில் வேட்டைக்குச் செல்லுதல், நடனம் ஆடுதல், போர்செய்தல் போன்ற காட்சிகள் வரையப்பட்டன.

3. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?

கரிக்கோல், நீர்வண்ணம், எண்ணெய்வண்ணம் ஆகியவற்றைக் கொண்டு தாள் ஓவியங்களை வரைவர்.

4. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக?

சித்தனவாசல், தஞ்சை பெரிய கோவில் ஆகிய இடங்களில் சுவர் ஓவியங்கள் காணப்படுகின்றன.

5. செப்பேட்டு ஓவியங்களில் காணப்படும் காட்சிகள் யாவை?

நீர்நிலைகள், செடிகொடிகள், பறவைகள், விலங்குகள், குறியீடுகள் போன்றவை செப்பேட்டு ஓவியங்களில் காணப்படும் காட்சிகளாகும்.

6. ஓவியம் வரையப் பயன்படும் துணிகள் யாவை?

எழினி, திரைச்சீலை, கிழி, படாம் போன்றவை ஓவியம் வரையப் பயன்படும் துணிகளாகும்.

## இயல் - 7

**கவிதைப்பேழை : 1. விருந்தோம்பல்**

**2. வயலும் வாழ்வும்**

**உரைநடை உகலம் : திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி**

### கவிதைப் பேழை - 1. விருந்தோம்பல்

I. பொருள் தருக:

1. மாரி - மழை
2. புகவா - உணவாக
3. மடமகள் - இளமகள்
4. நல்கினாள் - கொடுத்தாள்
5. முன்றில் - வீட்டின் முன் இடம் (திண்ணை)

II. பிரித்து எழுதுக:

1. நீருலை - நீர் + உலை
2. மாரியொன்று - மாரி + ஒன்று
3. வறண்டிருந்த - வறண்டு +இருந்த

III. குறுவினாக்கள்:

1. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக?

அங்கவை, சங்கவை

2. பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை எவ்வாறு?

மழையின்றி வறட்சி நிலவிய காலத்தில் பாணர்கள் இரந்து நின்ற போது பாரி மகளிர் உலை நீரில் பொன் இட்டு அவர்களுக்கு தந்தனர். அதனால் பொருள் ஏதும் இல்லாத வீடு எதுவும் இல்லை என்பதை அறியலாம்.

### கவிதைப் பேழை - 2. வயலும் வாழ்வும்

I. பொருள் தருக:

1. மணி - முற்றிய நெல்
2. சீலை - புடவை
3. மடை - வயலுக்கு நீர் வரும் வழி
4. சாண் - நீட்டல் அளவைப் பெயர்

II. பிரித்து எழுதுக:

1. தேர்ந்தெடுத்து - தேர்ந்து + எடுத்து
2. சீலையெல்லாம் - சீலை + எல்லாம்
3. ஒண்ணரை - ஒன்று + அரை

III. சேர்த்து எழுதுக:

1. ஓடை + எல்லாம் - ஓடையெல்லாம்
2. கொடுத்து + வாரான் - கொடுத்துவாரான்

IV. குறுவினாக்கள்:

1. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?

நாற்றுப் பறிக்கும் போது ஆண்களும், பெண்களும் வயல் வரப்பில் உள்ள நண்டுகளைப் பிடித்தனர்.

2. நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?

கதிரடித்த நெல்தாள்களை கிழக்கத்தி மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்தனர். மாடுகள் மிதித்த நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்ந்தன.

3. நாட்டுப் புறப்பாடல் என்றால் என்ன?

நாட்டுப் புறங்களில் உழைக்கும் மக்கள் தங்கள் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக பாடும் பாடலே நாட்டுப்புறப்பாடல் எனப்படும். இதனை வாய்மொழி இலக்கியம் எனவும் வழங்குவர்.

4. போரடித்தல் என்றால் என்ன?

அறுவடை செய்த நெற்கதிர்களை களத்தில் அடித்து நெல்லைப் பிரிப்பர். நெல்தாளில் எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்வர். இதற்கு போரடித்தல் என்று பெயர்.

### உரைநடை உகலம்: திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி

I. பொருள் தருக:

1. புனல் - நீர்
2. பணி - வேலை
3. காவற்புரை - சிறைச்சாலை
4. கூலம் - தானியம்

II. பிரித்து எழுதுக:

1. பழந்தமிழகம் - பழமை + தமிழகம்
2. மூவேந்தர் - மூன்று + வேந்தர்
3. தேரோடும் - தேர் + ஓடும்

III. குறுவினாக்கள்:

1. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?

பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனா நதி ஆகியவை கிளை ஆறுகள் ஆகும்.

2. கொற்கை முத்து பற்றிக் கூறுக?

தாமிரபரணி கடலோடு கலக்கும் இடத்தில் கொற்கை என்னும் துறைமுகம் உள்ளது. இங்கு முத்துக்குளித்தல் சிறப்பாக நடைப் பெற்றதாக தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

## இயல் - 8

**கவிதைப்பேழை : 1. புதுமை விளக்கு**

**2. அறம் என்னும் கதிர்**

**உரைநடை உகலம் : ஒப்பரவு நெறி**

### கவிதைப் பேழை - 1. புதுமை விளக்கு

I. பொருள் தருக:

1. கதிரோன் - சூரியன்
2. வார்கடல் - ஒலிக்கின்ற கடல்
3. ஆழி - கடல்
4. ஆர்வம் - விருப்பம்

II. சேர்த்து எழுதுக:

1. விளக்கு + ஏற்றினேன் - விளக்கேற்றினேன்
2. ஞானம் + தமிழ் - ஞானத்தமிழ்

III. குறுவினாக்கள்:

1. முதலாழ்வார்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் யாவர்?

1. பொய்கையாழ்வார் 2. பூதத்தாழ்வார் 3. பேயாழ்வார் ஆகிய மூவரும் முதலாழ்வார்கள் என்று அழைக்கப்பட்டனர்.

2. அந்தாதி என்பது யாது?

ஒரு பாடலின் இறுதி எழுத்தோ, அசையோ, சொல்லோ அடுத்து வரும் பாடலுக்கு முதலாக அமைவதை அந்தாதி என்பர்.

3. பொய்கையாழ்வார் பற்றிக் குறிப்பு எழுதுக.

இவர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்,

காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திரு. வெஃகா என்னும் ஊரில் பிறந்தார்.

நாலாயிரதிவ்விய பிரபந்தத்தில் உள்ள முதல் திருவந்தாதியைப் பாடியவர்.

4. பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர்?

பொய்கையாழ்வார் - பூமியை அகல்விளக்காக உருவகப்படுத்துகின்றார்.

பூதத்தாழ்வார் - அன்பை அகல்விளக்காக உருவகப்படுத்துகின்றார்.

5. பொய்கையாழ்வார் எதற்காக பாமாலை சூட்டுகிறார்?

பொய்கையாழ்வார் தன் துன்பக்கடல் நீங்க வேண்டி, சிவந்த ஒளிவீசும் சக்கரத்தை உடைய திருமாலின் திருவடிகளுக்குப் பாமாலை சூட்டுகிறார்.

### கவிதைப்பேழை - 2. அறம் என்னும் கதிர்

I. பொருள் தருக:

1. இன்சொல் - இனிமையானச் சொல்
2. ஈதல் - கொடுத்தல்
3. வாய்மை - உண்மை

II. பிரித்து எழுதுக:

1. வன்சொல் - வன்மை + சொல்
2. அறக்கதிர் - அறம் + கதிர்
3. பைங்கூழ் - பசுமை + கூழ்

III. குறுவினாக்கள்:

1. அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?

அறக்கதிர் விளைய, விளைநிலத்தில் உண்மைப் பேசுதல் என்னும் எருவினை எருவாக இட வேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்.

2. 'நீக்க வேண்டிய களை' என்று அற நெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?

நாம் கூறும் கடுமையானச் சொற்களே நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் குறிப்பிடுகிறது.

3. அறநெறிச்சாரம் - நூல் குறிப்பு எழுதுக.

இந்நூலின் ஆசிரியர் முனைப்பாடியார் ஆவார்.

இந்நூல் 225 பாடல்களைக் கொண்டது.

இந்நூல் அறநெறிகளைத் தொகுத்துக் கூறுவதால் அறநெறிச்சாரம் எனப் பெயர்பெற்றது.

### உரைநடை உகலம் - ஒப்பரவு நெறி

I. பிரித்து எழுதுக:

1. பொருளீட்டி - பொருள் + ஈட்டி
2. பொறுப்புணர்வுடன் - பொறுப்பு + உணர்வுடன்

II. சேர்த்து எழுதுக:

1. பொது + உடைமை - பொதுவுடைமை
2. நயன் + உடையான் - நயனுடையான்
3. அறம் + நிலையம் - அறநிலையம்
4. குறள் + செல்வம் - குறட்செல்வம்
5. அருள் + ஓசை - அருளோசை

III. குறுவினாக்கள்:

1. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?

பொருள் தேடுவது ஒரு பெரிய செயல் ஆகும்.

பொருளைத் தேடுவதைவிட பெரிய செயல் தேடியப் பொருளை அனுபவிப்பதும், பிறருக்குக் கொடுத்து மகிழ்வதும் ஆகும்.

2. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?

பொருளீட்டுவதன் நோக்கம், தான் மட்டும் வாழ்வதற்காக அன்று.

ஈட்டியப் பொருளை மற்றவர்களுக்கு வழங்கி, மகிழ்வித்து மகிழ, வாழ்வித்துவாழ பொருள் தேவை என பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி

அடிகளார் கூறுகின்றார்.

3. யாருடைய செல்வம் பலருக்கும் பயன்படுகிறது?

உலகிலுள்ளோர் விரும்புமாறு உதவி செய்து வாழ்பவரது செல்வமானது ஊருணியில் நிரம்பிய நீர்போலப் பலருக்கும் பயன்படுகிறது.

## இயல் - 9

**கவிதைப்பேழை : 1. மழை பொழிவு**

**2. தன்னை அறிதல்**

**உரைநடை உலகம் : கண்ணியமிகு தலைவர்**

### கவிதைப் பேதை - 1. மழை பொழிவு

I. சேர்த்து எழுதுக:

1. ஏற்றம் + தாழ்வு - ஏற்றத்தாழ்வு
2. மலர் + சோலை - மலர்ச்சோலை
3. உண்மை + இல்லா - உண்மையில்லா
4. கண் + இமைக்கும் - கண்ணிமைக்கும்

II. குறுவினாக்கள்:

1. இந்த உலகம் யாருக்கு உரியது?

சாந்தம் என்னும் அமைதியான பண்பு கொண்டவர்கள் பேறு பெற்றவர்களாவர். எனவே உலகம் முழுவதும் அவர்களுக்கே உரியதாகும்.

2. உலகம் நிலை தடுமாறக் காரணம் என்ன?

இவ்வுலகம் சாதிகளாலும், கருத்து வேறுபாடுகளாலும் நிலை தடுமாறுகிறது.

3. வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?

வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற நல்ல உள்ளத்தோடு வாழ வேண்டும்.

### கவிதைப்பேழை - 2. தன்னை அறிதல்

I. பொருள் தருக:

1. விடியல் - காலைப் பொழுது
2. இரை - உணவு
3. அச்சம் - பயம்

II. குறுவினாக்கள்:

1. காக்கை ஏன் குயில் குஞ்சைப் போகச் சொன்னது?

குயில் ஒன்று காக்கையின் கூட்டில் முட்டையிடுகிறது.

முட்டையிலிருந்து வெளிவந்தது குயில் குஞ்சு என காகம் அறிந்து கொண்டு சேர்ந்து வாழ முடியாது என நினைத்து, காக்கை குயில் குஞ்சை போகச் சொன்னது.

2. குயில் குஞ்சு தன்னை எப்போது 'குயில்' என உணர்ந்தது?

குயில் குஞ்சு தன் இனிமையான குரலை உணர்ந்த பிறகே குயில் என உணர்ந்தது.

### உரைநடை உலகம் - கண்ணிய மிகு தலைவர்

I. பிரித்து எழுதுக:

1. எதிரொலித்தது - எதிர் + ஒலித்தது
2. பணியாற்றினார் - பணி + ஆற்றினார்
3. அரசியலமைப்பு - அரசியல் + அமைப்பு
4. எடுத்துரைத்தார் - எடுத்து + உரைத்தார்

II. குறுவினாக்கள்:

1. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.

காயிதே மில்லத் அவர்கள் நாட்டுப்பற்று மிக்கவர்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே 1962 ஆம் ஆண்டு போர் மூண்டது.

அப்போது அவர் தனது ஒரே மகனைப் போர் முனைக்கு அனுப்ப ஆயத்தமாக இருப்பதாக அப்போதைய முதன்மை அமைச்சர் ஜவகர்லால் நேருவுக்குக் கடிதம் மூலம் தெரிவித்தார்.

2. காயிதே மில்லத் அவர்கள் நேர்மையைக் கடைபிடித்தார் என்பதற்குச் சான்றாக உள்ள நிகழ்வை எழுதுக.

காயிதே மில்லத் ஒரு பணியாளரை அழைத்து அவரிடம் ஓர் உறையையும் பணத்தையும் கொடுத்து அஞ்சல் தலை வாங்கி வரச் சொன்னார்.

அந்தப் பணியாளர் நம் அலுவலகத்தில் இருந்து வாங்கி ஒட்டி விடுகிறேன் என்றார்.

அதற்கு இயக்கப் பணத்தில் இருந்து வாங்கப்பட்ட அஞ்சல்தலைகளைப் பயன்படுத்துவது முறையாகாது என்று கூறினார்.

3. காயிதே மில்லத் அவர்களின் இயற்பெயர் என்ன?

கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் இயற்பெயர் முகம்மது இசுமாயில் என்பதாகும்.